


# மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம் (DTCP) ஈரோடு மாவட்டம்
## மொடக்குறிச்சி ஊராட்சி ஒன்றியம்
## கணபதிபாளையம் ஊராட்சி

ஈரோடு மாவட்டம், மொடக்குறிச்சி வட்டம் மற்றும் ஊராட்சி ஒன்றியம், கணபதிபாளையம் ஊராட்சி, புஞ்சை காளமங்களம் "ஆ" கிராமம், ரீ.ச.எண்: 635/2B-ல் அமையும் உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவிற்கான தொழில்நுட்ப ஒப்புதல் வரைபடம். திட்டமில்லா பகுதி

அளவு :1:400 **[ ALL DIMENSIONS ARE IN METER ]**

**Online Application No:** CWUZLCOJ **Date :** 01.07.2025

குறிப்பு :

| | | |
|---|---|---|
| மனையின் மொத்த பரப்பு | : 1.10 $\frac{3}{4}$ ஏக்கர் (அ) 4490.00 ச.மீ | |
| கோரிய மனைகள் | : 18 | |
| ஒதுக்கிய மனைகள் | : 18 | |
| மனைப்பிரிவின் எல்லை | ------------------------------------------ | |
| நிலையிலுள்ள சாலை | ------------------------------------------ | |

உள்ளாட்சிக்கு தானமாக ஒப்படைக்கப்பட்டவை :

மனைப்பிரிவின் சாலை : 1491.35ச.மீ

பூங்கா ஒதுக்கீட்டிற்கான பரப்பு : {மனைப்பிரிவின் பரப்பு - மனைப்பிரிவு சாலைகளின் பரப்பு} x10%

: {4490.00 - 1491.35} x 10% = 299.86 ச.மீ

: 299.86 ச.மீ (10.0 %) ( **299.86** ச.மீ ஈடாக அரசு வழிகாட்டி மதிப்பீடின் படி உரிய தொகை மனுதாரரால் அரசுக்கு செலுத்தப்பட்டுள்ளது. )

பொது உபயோகம் மற்றும் மின்பகிர்மான கழகத்திற்கு தேவையான பரப்பு : {மனைப்பிரிவின் பரப்பு - மனைப்பிரிவு சாலைகளின் பரப்பு} x1.0%

: {4490.00 - 1491.35} x 0.5% = 14.99 ச.மீ

பொது உபயோகம் (A) : 35.88 ச.மீ (1.19%)

தான ஆவண எண்: 2195/2025 நாள்: 08.08.2025-ல் ஒப்படைப்பு செய்யப்பட்டுள்ளது.

தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத்திற்காக உள்ளாட்சிக்கு தானமாக ஒப்படைக்கப்படவை :

பொது உபயோகம் (B) : 27.30 ச.மீ (0.91%)

தான ஆவண எண்: 2195/2025 நாள்: 08.08.2025-ல் ஒப்படைப்பு செய்யப்பட்டுள்ளது.

கட்டிட வரம்பு :

9.0மீ வரை உள்ள சாலைகளுக்கு 1.5மீ விடப்படல் வேண்டும்.
9.0மீ க்கு மேல் 18.0மீ வரை உள்ள சாலைகளுக்கு 3.0மீ விடப்படல் வேண்டும்.

மூலை முடுக்கு :

12.0மீ வரை உள்ள சாலைகளுக்கு 1.5 x 1.5மீ விடப்படல் வேண்டும்.

வ

## நிபந்தனைகள்

1. அரசாணை எண்-18 ந.நி மற்றும் கு.நீ.வ துறை நாள் 04.02.2019 (ம) அரசாணை எண்-16 ந.நி மற்றும் கு.நீ.வ துறை நாள் 31.01.2020 ன் படி மனைப்பிரிவு சாலை மற்றும் 0.5% பூமி உள்ளாட்சிக்கும், 0.5% பூமி TANGEDCO அல்லது உள்ளாட்சிக்கு தானமாக பெற நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும்.
2. அரசாணை எண்-181 வீ.வ (ம) ந.வ.து. நாள் 09.12.2020-ல் தெரிவித்துள்ளவாறு சாலைகள், மழைநீர் வடிகால் வசதி மேல்நிலை நீர்தேக்க தொட்டியுடன் கூடிய குடிநீர் வசதிகள் மற்றும் தெருவிளக்குகள் ஆகியவை உள்ளாட்சியின் விருப்பத்திற்கு ஏற்ப அமைக்கப்பட்ட பின்னர் இறுதி ஒப்புதல் வழங்கப்பட வேண்டும்.
3. அரசாணை எண்-141 வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சிதுறை நாள்:16.07.2022 ன் படி நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும்.
4. இம்மனைப்பிரிவிற்கு உள்ளாட்சி இறுதி ஒப்புதல் அளிக்கும்முன் இடத்தினை எந்தத்துறையாலும் நில ஆர்ஜித நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை என்றும், எந்த துறைக்காகவும் நில ஆர்ஜிதப்பட்டியல் மாவட்டவருவாய் அலுவலருக்கு அனுப்பப்படவில்லை என்றும் தனி அலுவலர் / வட்டார வளர்ச்சி அலுவலர், கணபதிபாளையம் ஊராட்சி/மொடக்குறிச்சி ஊராட்சி ஒன்றியம் அவர்கள் உறுதி செய்து கொள்ளவேண்டும்.
5. நில உரிமம் குறித்து வழங்கப்பட்ட சான்றுகள் மற்றும் பரிசீலனைக்கு சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் சரியானவையல்ல என்று அறியப்பட்டாலோ அல்லது மனைப்பிரிவுக்கு தொழில்நுட்ப ஒப்புதல் வழங்கியதால் பாதிப்பு ஏற்படக்கூடிய சூழ்நிலை ஏற்பட்டாலோ மனைப்பிரிவுக்கு வழங்கப்பட்ட தொழில்நுட்ப ஒப்புதல் எவ்வித முன்னறிவிப்பும் இன்றி நகர் ஊரமைப்பு இயக்குநர் சென்னை அவர்களால் ரத்து செய்யப்படும்.
6. விற்பனைக்குண்டான மனைகளை விற்பனை செய்யும் போது இவ்வரைபட நகலோடு நகர் ஊரமைப்புத்துறையில் ஒப்புதல் அளிக்கப்பட்ட ஆணையின் நகல் மனை வாங்குபவர்களுக்கு கட்டாயம் வழங்கப்பட வேண்டும்.
7. ஒப்புதல் அளிக்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடத்தை எந்த வித மாற்றம் / விடுதலின்றி மனைப்பிரிவு நுழைவாயிலில் 6' X 4' என்ற அளவிலான நிரந்தர தகவல்பலகை மூலம் பொதுமக்கள் பார்வைக்கு நிரந்தரமாக பிரசுரிக்கப்பட வேண்டும்.
8. நகர் ஊரமைப்பு துறை சட்டப்பூர்வமாக தொழில்நுட்ப அனுமதி அளிப்பதன் மூலம் விண்ணப்பதாரரின் பேரில் உள்ள நில உரிமையை உறுதிப்படுத்தவில்லை தொழில்நுட்ப அனுமதி அளிப்பதற்கு முன்பு விண்ணப்பதாரரின் விண்ணப்பத்துடன் சமர்ப்பித்த ஆவணங்களில் (கிரையப்பத்திரம், குத்தகை பத்திரம், பட்டா, தானப்பத்திரம், பொது அதிகார பத்திரம், மேலும் பல) விண்ணப்பதாரர் வளர்ச்சி செய்ய உரிமை உள்ளதா என்று மட்டுமே சரிபார்கப்படுகிறது. அதன் மூலம் முதற்கட்டமாக விண்ணப்பதாரருக்கு வளர்ச்சி செய்ய உரிமை உள்ளதா என்று பார்க்கப்படுகிறது. சொத்தினை வாங்க விரும்பும் எந்த ஒரு நபரும் விண்ணப்பதாரருக்கு சொத்தின் மீது உள்ள உரிமை தனியாக உறுதிப்படுத்திக்கொள்ள வேண்டும் மேலும் அதன் மேல் வேறு யாரேனும் தனி நபர் உரிமை கோரினால் அவர்கள் அதனை பொருத்தமான தகுதியுள்ள நீதிமன்றத்தின் முன் தீர்த்துக்கொள்ளலாம். இதனை முடிவு செய்ய நகர் ஊரமைப்புத்துறை பொருத்தமான அமைப்பு அல்ல.
9. மனைகளின் ஊடே மின் கம்பி பாதை அமையுமாயின் அதனை சாலையின் போக்கிற்கு மாற்றி அமைத்த பின்னரே (அ) நீக்கிய பின்னரே மனைப்பிரிவிற்கு உள்ளாட்சியால் இறுதி ஒப்புதல் வழங்கப்படல் வேண்டும்.
10. பிரஸ்தாப மனைப்பிரிவுக்கு இவ்வலுவலகத்தால் தொழில் நுட்ப ஒப்புதல் மட்டுமே வழங்கப்படுகிறது. மனுதாரரின் நில உரிமத்தினை உறுதி செய்து பின்னரே உள்ளாட்சியில் இறுதி ஒப்புதல் வழங்கப்படல் வேண்டும்.
11. பிரஸ்தாப மனைப்பிரிவு அமையும் இடத்தில் நீதி மன்ற வழக்கு ஏதும் இருப்பின் இம்மனைப்பிரிவு அனுமதி செல்லத்தக்கல்ல.
12. மனைப்பிரிவினை சுற்றி சுற்றுசுவர் (COMPOUND WALL) அமைக்கப்பட்டிருப்பின் அதனை அகற்றி அருகிலிருக்கும் இடத்திற்கு இணைப்பு பாதை அமையும் வகையில் சுற்றுசுவர் இடித்து அப்புறப்படுத்தப்பட வேண்டும்
13. மனைப்பிரிவில் ஊடே/அருகில் நீர்நிலை அமையுமாயின் அதற்கு பாதிப்பு ஏற்படாத வன்னம் மனைப்பிரிவு அமைக்கப்படல் வேண்டும், 3.0மீ அகல புல்வெளி நிலைநிறுத்தப்படல் வேண்டும், இதனை உள்ளாட்சி உறுதி செய்தல் வேண்டும்.
14. மனைப்பிரிவினை உள்ளாட்சி இறுதி ஒப்புதல் மற்றும் **RERA** ஒப்புதல் பெற்ற பின்னரே மனை விற்பனை செய்யப்படல் வேண்டும்.
15. செயற்பொறியாளர், கீழ்பவானி வடிநிலக்கோட்டம், ஈரோடு அவர்களின் கடிதஎண்:வ.3/கோ.107/240M/2025/நாள்:28.05.2025-கடிதத்தில் குறிப்பிட்டுள்ளவாறு மனுதாரரின் இடத்திற்கு செல்ல ரீ.ச.எண் : 635/6-ன் குறுக்கே 9.0மீ அகலத்தில் உத்தேச சிறுபாலம் அமைக்க அனுமதி பெறப்பட்டதை தொடர்ந்து இம்மனைப்பிரிவிற்கு தொழில்நுட்ப ஒப்புதல் வழங்கப்படுகிறது. இதனை ஊராட்சி உறுதி செய்த பின்னரே இறுதி ஒப்புதல் வழங்கப்பட வேண்டும்.

**SWP /DTCP /ERODE /LAYOUT APPROVAL NO : 254/2025**

| | |
|---|---|
| அளவர் / உதவி வரைவாளர் | ஜெ.சீனிவாசன் |
| வரைவாளர் நிலை-III | கா.வேல்முருகன் |
| மேற்பார்வையாளர் / வரைவாளர் நிலை-II | மு.தேன்மொழி |

Signature valid Signature valid

Signed by: Assistant Director Location:Erode Date:2025.08.20 10:48:31

Signed by: Village Panchayat President Location:Erode Date:2025.12.08 15:00:52

நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் (பொ)
மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம்
ஈரோடு மாவட்டம்.